SENIOR TAMILS' CENTRE OF ONTARIO
ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்

வைகறை
VAIHARAI-e-magazine


இதழ் 48
March 5, 2021

**It isn't what you have, or who you are, or where you are, or what you are doing that make you happy or unhappy. It is what you think about.**





### 10 PRACTICAL WAYS TO LET GO AND FREE YOURSELF

1. Detach from outcome and focus on the process. Exercise self-compassion.
2. Understand that the life you thought you would have may not be the life you will actually have.
3. Separate yourself from attachment to externals (possessions, beauty, titles, money, status, situation, etc.) Bring your attention to the internal, deeper, psycho-spiritual-relational process within. This will bring you peace, calm and serenity. When we focus on externals, enough is never enough.
4. Stop worrying about what other people think. While hanging onto your morale and value compass, free yourself from being consumed or controlled by the opinions of others. Choose to care more about how you feel about yourself than whether or not your neighbor approves.
5. Purge unnecessary belongings.
6. Practice acceptance.
7. Detach from irrational fear.
8. Laugh at yourself, laugh at life and learn not to take it all too seriously.
9. Detach from your ego.
10. Release the feelings you store in your body through exercise.




சான்றோர் மொழிகள்...!!

முதல் தெய்வம் - பெற்றோர்...
மிகமிக நல்ல நாள் - இன்று...
மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு...
மிகவும் வேண்டாதது - வெறுப்பு...
மிகவும் தேவை - புத்திசாலித்தனம்...
மிகக்கொடிய நோய் - பேராசை...
நம்பக்கூடாதது - வதந்தி...
செய்யக்கூடாதது - துரோகம்...
செய்யவேண்டியது - உதவி...
பிரியக்கூடாதது - நட்பு...
மறக்கக்கூடாதது - நன்றி...



**ஒரு மனைவியின் கதை... நான் படித்து வியந்துபோன ஒரு காதல் வரலாறு**
..
சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு. பிரஷ்யா என்று அழைக்கப்பட்ட இன்றைய ஜெர்மனியில் ட்ரியர் நகரம். பிரஷ்ய அரசாங்கத்தில் அதிகாரியாக இருந்தவரும் பரம்பரை பணக்காரருமான ஜான் லுத்விக் வோன் வெஸ்ட்பாலனுக்கும் கரோலின் ஹ்யூபெலுக்கும் 1814-ம் ஆண்டு பிறந்தார் ஜென்னி. அதே நகரில் நான்கு ஆண்டுகள் கழித்து, 1818-ம் ஆண்டு ஹென்ரிச் மார்க்ஸ் – ப்ரெஸ்பர்க் தம்பதிக்குப் பிறந்தார் கார்ல் மார்க்ஸ். ஜென்னியின் குடும்பமும் மார்க்ஸின் குடும்பமும் பக்கத்து பக்கத்து வீடுகளில் வசித்தன. மார்க்ஸின் அக்காவும் ஜென்னியும் பள்ளித் தோழிகள். ஜென்னியின் தம்பியும் மார்க்ஸும் ஒன்றாகப் படித்தாலும் ஜென்னியின் அப்பாதான் மார்க்ஸுக்கு நெருங்கிய நண்பராக இருந்தார். அரசியல், சமூகச் சிந்தனைகள், தத்துவம், இலக்கியம் போன்ற பல விஷயங்களை வெஸ்ட்பாலன் மார்க்ஸுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இருவரும் நிறைய விவாதிப்பார்கள். ஜென்னிக்கு கவிதைகள் மீது தீராத ஆர்வம். அன்பும் பண்பும் திறமையும் கொண்ட ஜென்னியை எல்லோருக்குமே பிடித்துப் போகும். மார்க்ஸுக்கும் ஜென்னியைப் பிடித்ததில் ஆச்சரியம் இல்லை. பள்ளி இறுதி ஆண்டில், 'எதிர்கால வேலை' என்ற தலைப்பில் மாணவர்களைக் கட்டுரை எழுதச் சொன்னார்கள். அதில் மார்க்ஸ் எழுதியவை...

'மனிதன் என்பவன் தனக்காக மட்டுமே வாழ்பவன் அல்ல. அவன் சக மனிதனுக்காகவும் பாடுபட வேண்டும். தனக்காகப் பாடுபடுபவன் நல்ல சிந்தனையாளராக இருக்கலாம், நல்ல நிர்வாகியாக இருக்கலாம். ஆனால், நல்ல மனிதனாக இருக்க முடியாது. மனிதகுலத்தின் பெரும்பான்மைக்குப் பயன்படக்கூடிய ஒரு வேலையைச் செய்தால், அதில் வரும் எந்தத் தடையும் நம்மை ஒன்றும் செய்துவிடாது. நம் தியாகத்தால் உலக மக்களுக்கு நன்மை கிடைக்கிறது என்றால் அந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதில் இருக்கும் உண்மையான சந்தோஷம் என்றும் நிலைத்திருக்கும். அதுபோன்ற பணியையே நான் விரும்பி ஏற்கப் போகிறேன்.' ஜென்னிக்கு மார்க்ஸைப் பிடிக்க அவருடைய அறிவும் மக்களுக்கான சிந்தனைகளும்தான் காரணம். தன்னைப் போலவே மார்க்ஸும் வழக்கறிஞராக வேண்டும் என்று அவர் அப்பா நினைத்தார். பெர்லின் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்தார். ஜென்னிக்கும் மார்க்ஸுக்கும் பிரிவு துயரத்தை அளித்தாலும் இருவரும் சூழ்நிலையைப் புரிந்துகொண்டனர். மார்க்ஸ் தொடர்ந்து ஜென்னிக்குக் கடிதம் எழுதி அனுப்பினார். அந்தக் கடிதம் முழுவதும் காதல் கவிதைகளால் நிரம்பி வழியும். ஜென்னியும் இலக்கிய ரசம் மிகுந்த, காதல் கடிதங்களை வீட்டுக்குத் தெரியாமல் எழுதுவார். ஜென்னி - மார்க்ஸ் காதல் மார்க்ஸின் அப்பாவுக்குத் தெரிய வந்தது. உண்மையில் அவர் பயந்து போனார். தன் குடும்பம் மிகவும் சாதாரணமானது. ஜென்னியின் குடும்பம் செல்வாக்கு மிக்க பணக்காரக் குடும்பம். இவர்களின் காதலால் அருமையான நண்பர் வெஸ்ட்பாலனின் நட்பு உடைந்துவிடுமோ என்று நினைத்தார். ஜென்னியிடம் மார்க்ஸைத் திருமணம் செய்துகொள்ள வேண்டாம் என்றார். மார்க்ஸிடம் காதலைத் துறந்துவிடும்படி கடிதம் எழுதினார். ஆனால், இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுப்பதாக இல்லை.

***

தத்துவத்தின் மீது மிகவும் ஈடுபாடுகொண்டார் மார்க்ஸ். புரட்சிகரச் சிந்தனையாளர்களின் இளம் ஹெகேலியர் இயக்கத்தில் இணைந்தார். 23 வயதில் டாக்டர் பட்டம் பெற்று ட்ரியர் திரும்பினார் மார்க்ஸ். அப்போது மார்க்ஸின் அப்பாவும் ஜென்னியின் அப்பாவும் மறைந்திருந்தார்கள். ஜென்னியின் அம்மாவுக்கு இவர்களின் திருமணத்தில் விருப்பமில்லை. திருமணம் தள்ளிப்போனது. நீண்ட காத்திருப்புக்குப் பிறகு, 29 வயதில் ஜென்னி தன் அன்புக்குரிய மார்க்ஸை மணந்துகொண்டார். 'ரைனிஷ் ஷெய்டுங்' பத்திரிகையில் அரசியல் விழிப்புணர்வு கட்டுரைகளை எழுதினார் மார்க்ஸ், விரைவில் அந்தப் பத்திரிகையின் ஆசிரியரானார். கோபமுற்ற அரசாங்கம் அந்தப் பத்திரிகையைத் தடை செய்தது. மார்க்ஸை நாட்டை விட்டு வெளியேறச் சொன்னது. மார்க்ஸும் ஜென்னியும் பிரான்ஸ் சென்றார்கள். சிறிய வீட்டில் மகிழ்ச்சியாக வாழ ஆரம்பித்தார்கள். அவர்கள் திருமணத்தின் போது கிடைத்த பணத்தை ஒரு பெட்டியில் வைத்திருந்தார் ஜென்னி. அந்தப் பெட்டி எப்போதும் திறந்தே இருக்கும். பணம் தேவைப்படும் நண்பர்கள் அந்தப் பெட்டியிலிருந்து பணத்தை எடுத்துக்கொள்ளலாம். தங்களால் பிறருக்கு உதவ முடிவதை நினைத்து ஜென்னியும் மார்க்ஸும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். 1844-ம் ஆண்டு ஜென்னி பெண் குழந்தைக்குத் தாயானார். தன் அன்பு மனைவியின் பெயரையே குழந்தைக்கு வைத்தார் மார்க்ஸ். ஜெர்மன் - பிரெஞ்சு புத்தகங்கள் தயாரிப்பில் ரூகேயுடன் சேர்ந்து வேலை செய்தார் மார்க்ஸ். அப்போது பிரெடரிக் ஏங்கெல்ஸ் அறிமுகம் கிடைத்தது.

***

இரண்டு ஆண்டுகளில் கையில் இருந்த பணம் காலி. ஜென்னிக்குப் பொருளாதாரக் கஷ்டம் வர ஆரம்பித்தது. அப்போது பிரஷ்யாவில் நெசவாளர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பெரிய மோதல் நடைபெற்றது. நெசவாளர்களுக்கு

ஆதரவாகக் கட்டுரைகள் எழுதினார் மார்க்ஸ். கோபம் அடைந்த பிரஷ்ய அரசாங்கம், பிரான்ஸில் இருந்து மார்க்ஸை வெளியேற்றும்படி கட்டாயப்படுத்தியது. மார்க்ஸ் பெல்ஜியம் நாட்டில் உள்ள பிரஸ்ஸல்ஸ் நகருக்குச் சென்றார். வீட்டில் இருந்த பொருள்களை விற்று, கிடைத்த பணத்தில் குழந்தைகளுடன் பிரஸ்ஸல்ஸ் போய்ச் சேர்ந்தார் ஜென்னி. ஜென்னியின் அம்மா மகளுக்கு உதவி செய்வதற்காக ஹெலன் டெமூத் என்பவரை அனுப்பி வைத்தார். மூன்றாவது குழந்தையாக மகன் பிறந்தான். ஜென்னியும் மார்க்ஸும் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். அங்கும் அரசாங்கத்தை எதிர்த்து எழுத தடை வந்தது. மார்க்ஸுக்கு வருமானம் குறைந்தது. பிரான்ஸில் மன்னராட்சிக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்தன. மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் வழிகாட்டலில் அமைந்த கம்யூனிஸ்ட் லீக் போராட்டங்களை ஒன்றிணைத்தது. லூயி மன்னன் நாட்டை விட்டு ஓடினார். இடைக்கால அரசாங்கம் மார்க்ஸை அழைத்தது. கிளம்புவதற்குள் ஒருநாள் நள்ளிரவு திடீரென்று மார்க்ஸைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். பதறிப்போன ஜென்னி, அவரைப் பின் தொடர்ந்து சென்றார். ஜென்னியையும் கைது செய்து, சிறையில் தள்ளினார்கள். அந்தச் சிறையில் குற்றவாளிகள் நிரம்பியிருந்தனர். ஜென்னிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. ஒருபுறம் கணவர் கைது, இன்னொரு புறம் குழந்தைகள் தனியாக இருந்தனர். தாங்க முடியாத குளிர். சகிக்க முடியாத இரவாக அமைந்தது. மறுநாள் ஜென்னி மறுநாள் விடுதலை செய்யப்பட்டார். அம்மாவும் அப்பாவும் கைது செய்யப்பட்ட விஷயத்தால் பயந்துபோயிருந்த குழந்தைகள் ஜென்னியைக் கண்டதும் ஓடிவந்து கட்டிக்கொண்டனர். மார்க்ஸும் விடுதலையானார். வீட்டில் இருந்த பொருள்களை விற்று, பிரான்ஸுக்குச் சென்றார்கள்.

***

மீண்டும் அரசியல் சூழ்நிலை மாறியது. மார்க்ஸை வெளியேறும்படிச் சொன்னது. மார்க்ஸ் குடும்பம் லண்டனுக்குக் குடிபெயர்ந்தது. அங்கு ஹென்ரிச் என்ற குழந்தை பிறந்தது. மார்க்ஸ் அரசியல் பொருளாதார ஆராய்ச்சியில் இறங்கினார். மார்க்ஸின் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கும். அவர் எழுதும் கட்டுரைகள், புத்தகங்களை ஜென்னி பிரதியெடுப்பார். தன்னுடைய கருத்துகளை மார்க்ஸுடன் விவாதிப்பார். மார்க்ஸும் ஜென்னியின் கருத்துகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிப்பார்.

1850-ம் வருடம் மிகவும் மோசமான காலகட்டம். பணமில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டனர். உதவி செய்யவும் ஆள்கள் இல்லை. ஜென்னி உதவி கேட்டு நண்பருக்குக் கடிதம் எழுதினார். ‘சரியான ஆகாரம் இல்லை. முதுகிலும் மார்பிலும் கடுமையான வலி. என் மார்பில் பால் சுரக்கவில்லை. குழந்தை பசியில் பலமாக உறிஞ்சியதில் தோல் வெடித்து, ரத்தம் அவன் வாயில் கொட்டியது… எங்களின் தேவை மிகவும் குறைவானதே. ஆனால், அதைப் பெறுவதுக்குக்கூட நாங்கள் மிகவும் போராட வேண்டியிருக்கிறது…’ ஒருநாள்…‘ஜென்னி, நான் உனக்குத் தாங்க முடியாத கஷ்டத்தை அளித்து வருகிறேன். எனக்கு வருத்தமாக இருக்கிறது…’ ’நாம் என்ன நமக்காகவா போராடுகிறோம்? பாட்டாளி மக்களுக்காகத்தானே போராடுகிறோம். அந்தப் போராட்டம் எந்தவிதத்திலும் என்னை நிலைகுலையச் செய்துவிடாது கார்ல். என்னை நினைத்து வருந்தத் தேவையில்லை. உண்மையில் நான் அதிர்ஷ்டம் செய்தவள். எனக்கு ஆதரவாக அன்பான கணவனாக நீ இருக்கும்போது எந்தக் கஷ்டமும் என்னை ஒன்றும் செய்துவிடாது…’ ‘நீ என்ன சொன்னாலும் நம் வாழ்க்கை மிகவும் கடினமானது ஜென்னி.’ ‘என்னுடைய கவலை எல்லாம் இதுபோன்ற பிரச்னைகளில் நீ கவலை அடைய வேண்டியிருக்கிறதே என்பதுதான். உன்னுடைய சிந்தனைக்கும் செயலுக்கும் இன்னும் நல்லவிதமான சூழல் அமைந்திருக்கலாம் கார்ல்.’ ’நீயும் குழந்தைகளும்தான் என்னுடைய சந்தோஷங்கள் ஜென்னி. உங்களைப் பார்க்கும்போது எந்தக் கவலையும் என்னை அண்டுவதில்லை.’ வாடகை கொடுக்க முடியாததால் பல வீடுகளுக்கு மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. பிரஷ்ய அரசாங்கம் மார்க்ஸ் மீதும் அவருடைய தோழர்கள் மீதும் பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தியது. ஜென்னிக்கு நரம்புத்தளர்ச்சி நோய் வந்தது. சிகிச்சைப் பெற வழியில்லை. சில காலங்களில் எட்வர்டுக்கு நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டது. பரிதாபமாகக் குழந்தை இறந்துபோனது. ஜென்னியையும் மார்க்ஸையும் மகனின் இறப்பு மிகவும் பாதித்தது. ஏங்கெல்ஸ் மற்றும் சில நண்பர்கள் அளித்த உதவியில் குடும்பம் பிழைத்தது. மார்க்ஸ் மீது கொலோன் கம்யூனிஸ்ட் சதி வழக்கு போட்டது பிரஷ்ய அரசாங்கம். அதிலிருந்து மீண்டு வருவதற்காக மார்க்ஸ் நிறைய உழைத்தார். சில நாள்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்த மகள் பிரான்சிஸ்கா, இறந்து போனாள். ‘என் அருமை மகள் இறந்த துக்கம் ஒருபுறம். அவளை அடக்கம் செய்வதற்குப் பணமில்லாதது இன்னொருபுறம். ஐயோ… எந்த அம்மாவுக்கும் இந்தக் கொடுமை வாய்க்கக்கூடாது. அன்பு பிரான்சிஸ்கா, நீ பிறந்தபோது தொட்டில் வாங்க பணமில்லை… நீ இறந்தபோது சவப்பெட்டி வாங்க பணமில்லை… எப்படிப்பட்ட பெற்றோர் நாங்கள்!’ ஜென்னி கதறினார். வேறுவழியில்லை. பக்கத்து அறையில் இறந்த மகளை வைத்துவிட்டு, மீதிக் குழந்தைகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இரவு முழுவதும் ஜென்னியும் மார்க்ஸும் அழுதனர். நண்பர் ஒருவர் இரண்டு பவுண்ட் கொடுத்து, சவப்பெட்டி வாங்க உதவினார். **(தொடரும்)**

“Your impact on other people is bigger than you think. Someone still giggles when they think of that funny thing you said. Someone still smiles when they think of the compliment you gave them. Someone silently admires you. The advice you give has made a difference for people. The support and love you’ve offered others has made someone’s day. Your input and opinions have made someone think twice. You’re not insignificant and forgotten. Your existence makes a positive difference, whether you see it or not.”

**லண்டனில் டாக்டர் கென்னத் வாக்கர்**

என்ற உலகப் புகழ் பெற்ற நியூரோ சர்ஜன் இருந்தார். அவருடைய வாழ்வில் நடந்த அனுபவத்தை இனி பார்ப்போம். வாக்கர் தான் பண்புரியும் செயிண்ட் ப்ரையாஸ் மருத்துவ மனையில் வழக்கம் போல் ரவுண்ட்சை முடித்துக் கொண்டு அருகே உள்ள மருத்துவ கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தார். இரண்டு கட்டிடங்களையும் இணைக்கும் பாலத்தில் நடந்து கொண்டிருந்தார். எதிரே ஐம்பது வயது மதிக்கத் தகுந்த நர்ஸ் ஒருவர் நடந்து வந்தார். அவர் லைட் ப்ளூ கலரில் வெள்ளை புள்ளியுடன் சீருடை அணிந்திருந்தார். அந்த நர்சுக்கு டாக்டர் வணக்கம் செலுத்தினார். அந்த பெண்ணும் தலையாட்டிவிட்டு நடந்து சென்றாள். டாக்டருக்கு அவள் அணிந்திருந்த சீருடையில் ஏதோ மாறுதல் தெரிந்தது. மேலும் அந்த பெண்ணை இதற்கு முன்பு அவர் கண்டதில்லை. உடனே அவளை திரும்பி பார்த்தார். அவள் காணவில்லை. அந்த நீண்ட பாலத்தில் குறுக்கு படிக்கட்டுகள் ஏதும் கிடையாது.!! தன் அறைக்கு சென்ற டாக்டர் சீனியர் நர்சுகளை அழைத்து தான் கண்ட அங்க லட்சனங்களோடு யாராவது நர்ஸ் இங்கே வேலை செய்கிறார்களா என கேட்டார். பலத்த அமைதி நிலவியது. "டாக்டர் எட்டாம் நம்பர் வார்டு நர்சை பார்த்தீர்களா?" என அவர்கள் கேட்டார்கள். பணியாள் ஒருவர் "டாக்டர் எங்களுக்கும் இதே பிர்ச்சனை தான். எட்டாம் நம்பர் வார்டில் இரவு பகல் பாராமல் அந்த நர்ஸ் அடிக்கடி வந்து தொல்லைக் கொடுக்கிறார். அதனால் அந்த வார்டில் அமர்வதையே நாங்கள் தவிர்த்துவிடுகிறோம்" என்றார். அந்த நர்சுக்கும் மேலதிகாரிக்கும் வாக்குவாதம் அதிகமாக எளிதில் உணர்சிவப்படக் கூடிய அவள் .,நாலாவது மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். தொந்தரவு தராத ஆவியாக அவள் வலம் வந்து கொண்டிருந்தாள்.

----+++--------------------------------

பீபி பெய்ன் எனும் ஆவி ஆராய்ச்சியாளரின் வாழ்வில் நடந்த அடுத்த சம்பவத்தை இனி பார்ப்போம். இது கொஞ்சம் முரட்டுத் தனமான ஆவி. பெய்ன் ஸ்காட்லாந்திலிருந்து லண்டன் நோக்கி காரில் வந்து கொண்டிருந்தார். அது ஒரு நள்ளிரவு நேரம். வழியில் கார் பழுதடைந்ததால் அருகே இருந்த லாட்ஜில் அறை எடுத்து தங்கினார். லாட்ஜிற்குள் நுழைந்த போதே ஏதோ ஒரு உள்ளுணர்வு அவருக்கு தோன்றியது. மாடியில் அவர் ஒரு அறையிலும் உதவியாளர் ஒரு அறையிலும் தங்கினார்கள். பெய்ன் தான் தங்கப்போகும் அறைக்குள் கால் வைத்த போதே மீண்டும் .,ஒரு உள்ளுணர்வு அவரை எச்சரித்தது. ஆனாலும் ஆராய்ச்சியாளரான அவர் அந்த சவாலை ஏற்றுக் கொண்டு அந்த அறைக்குள் தங்கினார். ஆழ்ந்த தூக்கத்தில் பெய்ன் இருந்த போது அந்த அறையில் குளிர் சற்று அதிகமானது. விழிப்படைந்த அவரின் கழுத்தை இரு கைகள் பற்றிக் கொண்டு அழுத்தின. மூச்சு திணறியது. எதிரே பச்சை கோட்டு அணிந்த வெளிர் முகத்துடன் ஒருவன் அமர்ந்திருந்தான். ஆவிகள் குறித்த குறிப்புகள் அதிகம் அவருக்கு தெரியுமாதலால் அதனிடம் எச்சரிக்கையாக நடந்து கொண்டார். "போ.. போ" என இருமுறை கூச்சலிட்டார். சிரமப்பட்டு அதன் கைகளை விலக்கி எழுந்து அமர்ந்தார். அந்த உருவம் பின்வாங்கியது. கதவைக் காட்டி போ அந்தப் பக்கம் போ என எச்சரித்தார். பரிதாபமாக பின்னோக்கி நடந்த அந்த உருவம் கதவுக்கு அருகே சென்று மெல்ல மங்கலாக மாறி சட்டென மறைந்து விட்டது. கழுத்தில் கீரலும் வலியும் அதிகமாக இருந்ததால் கண்ணாடி முன் சென்று பார்த்தார்.. அங்கே எந்த தடயமும் இல்லை. நேராக அந்த விடுதி மேலாளரிடம் சென்று விசாரித்தார். முதலில் மறுத்த அவர் பின்பு அந்த அறையில் ஆவி இருப்பதாக ஏற்றுக் கொண்டார். பெய்ன் அதைக் குறித்து சொல்லும்போது "ஆவிகள் குறித்து கவலைப்பட தேவையில்லை. பயந்தால் ஆபத்து நிச்சயம்" என குறிப்பிடுகிறார். உங்களுடைய பயம் ஆவிகளுக்கு கூடுதல் பலத்தைக் கொடுத்துவிடும். நீ பயப்படுபோது ஆவிகள் மனோதத்துவ தாக்குதலைத் தொடங்கிவிடும். ஒருவரைக் கொல்வது ஆவிகளல்ல. அவனாகவே பயத்தில் செத்துப் போகிறான் என அவர் சொல்கிறார்.

In life you will meet two kinds of people. Ones who build you up, and ones who bring you down. But in the end, you will thank them both.






**லண்டனில் டாக்டர் கென்னத் வாக்கர்**

என்ற உலகப் புகழ் பெற்ற நியூரோ சர்ஜன் இருந்தார். அவருடைய வாழ்வில் நடந்த அனுபவத்தை இனி பார்ப்போம். வாக்கர் தான் பண்புரியும் செயிண்ட் ப்ரையாஸ் மருத்துவ மனையில் வழக்கம் போல் ரவுண்ட்சை முடித்துக் கொண்டு அருகே உள்ள மருத்துவ கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தார். இரண்டு கட்டிடங்களையும் இணைக்கும் பாலத்தில் நடந்து கொண்டிருந்தார். எதிரே ஐம்பது வயது மதிக்கத் தகுந்த நர்ஸ் ஒருவர் நடந்து வந்தார். அவர் லைட் ப்ளூ கலரில் வெள்ளை புள்ளியுடன் சீருடை அணிந்திருந்தார். அந்த நர்சுக்கு டாக்டர் வணக்கம் செலுத்தினார். அந்த பெண்ணும் தலையாட்டிவிட்டு நடந்து சென்றாள். டாக்டருக்கு அவள் அணிந்திருந்த சீருடையில் ஏதோ மாறுதல் தெரிந்தது. மேலும் அந்த பெண்ணை இதற்கு முன்பு அவர் கண்டதில்லை. உடனே அவளை திரும்பி பார்த்தார். அவள் காணவில்லை. அந்த நீண்ட பாலத்தில் குறுக்கு படிக்கட்டுகள் ஏதும் கிடையாது.!! தன் அறைக்கு சென்ற டாக்டர் சீனியர் நர்சுகளை அழைத்து தான் கண்ட அங்க லட்சனங்களோடு யாராவது நர்ஸ் இங்கே வேலை செய்கிறார்களா என கேட்டார். பலத்த அமைதி நிலவியது. "டாக்டர் எட்டாம் நம்பர் வார்டு நர்சை பார்த்தீர்களா?" என அவர்கள் கேட்டார்கள். பணியாள் ஒருவர் "டாக்டர் எங்களுக்கும் இதே பிர்ச்சனை தான். எட்டாம் நம்பர் வார்டில் இரவு பகல் பாராமல் அந்த நர்ஸ் அடிக்கடி வந்து தொல்லைக் கொடுக்கிறார். அதனால் அந்த வார்டில் அமர்வதையே நாங்கள் தவிர்த்துவிடுகிறோம்" என்றார். அந்த நர்சுக்கும் மேலதிகாரிக்கும் வாக்குவாதம் அதிகமாக எளிதில் உணர்சிவப்படக் கூடிய அவள் .,நாலாவது மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். தொந்தரவு தராத ஆவியாக அவள் வலம் வந்து கொண்டிருந்தாள்.

----+++--------------------------------

பீபி பெய்ன் எனும் ஆவி ஆராய்ச்சியாளரின் வாழ்வில் நடந்த அடுத்த சம்பவத்தை இனி பார்ப்போம். இது கொஞ்சம் முரட்டுத் தனமான ஆவி. பெய்ன் ஸ்காட்லாந்திலிருந்து லண்டன் நோக்கி காரில் வந்து கொண்டிருந்தார். அது ஒரு நள்ளிரவு நேரம். வழியில் கார் பழுதடைந்ததால் அருகே இருந்த லாட்ஜில் அறை எடுத்து தங்கினார். லாட்ஜிற்குள் நுழைந்த போதே ஏதோ ஒரு உள்ளுணர்வு அவருக்கு தோன்றியது. மாடியில் அவர் ஒரு அறையிலும் உதவியாளர் ஒரு அறையிலும் தங்கினார்கள். பெய்ன் தான் தங்கப்போகும் அறைக்குள் கால் வைத்த போதே மீண்டும் .,ஒரு உள்ளுணர்வு அவரை எச்சரித்தது. ஆனாலும் ஆராய்ச்சியாளரான அவர் அந்த சவாலை ஏற்றுக் கொண்டு அந்த அறைக்குள் தங்கினார். ஆழ்ந்த தூக்கத்தில் பெய்ன் இருந்த போது அந்த அறையில் குளிர் சற்று அதிகமானது. விழிப்படைந்த அவரின் கழுத்தை இரு கைகள் பற்றிக் கொண்டு அழுத்தின. மூச்சு திணறியது. எதிரே பச்சை கோட்டு அணிந்த வெளிர் முகத்துடன் ஒருவன் அமர்ந்திருந்தான். ஆவிகள் குறித்த குறிப்புகள் அதிகம் அவருக்கு தெரியுமாதலால் அதனிடம் எச்சரிக்கையாக நடந்து கொண்டார். "போ.. போ" என இருமுறை கூச்சலிட்டார். சிரமப்பட்டு அதன் கைகளை விலக்கி எழுந்து அமர்ந்தார். அந்த உருவம் பின்வாங்கியது. கதவைக் காட்டி போ அந்தப் பக்கம் போ என எச்சரித்தார். பரிதாபமாக பின்னோக்கி நடந்த அந்த உருவம் கதவுக்கு அருகே சென்று மெல்ல மங்கலாக மாறி சட்டென மறைந்து விட்டது. கழுத்தில் கீரலும் வலியும் அதிகமாக இருந்ததால் கண்ணாடி முன் சென்று பார்த்தார்.. அங்கே எந்த தடயமும் இல்லை. நேராக அந்த விடுதி மேலாளரிடம் சென்று விசாரித்தார். முதலில் மறுத்த அவர் பின்பு அந்த அறையில் ஆவி இருப்பதாக ஏற்றுக் கொண்டார். பெய்ன் அதைக் குறித்து சொல்லும்போது "ஆவிகள் குறித்து கவலைப்பட தேவையில்லை. பயந்தால் ஆபத்து நிச்சயம்" என குறிப்பிடுகிறார். உங்களுடைய பயம் ஆவிகளுக்கு கூடுதல் பலத்தைக் கொடுத்துவிடும். நீ பயப்படுபோது ஆவிகள் மனோதத்துவ தாக்குதலைத் தொடங்கிவிடும். ஒருவரைக் கொல்வது ஆவிகளல்ல. அவனாகவே பயத்தில் செத்துப் போகிறான் என அவர் சொல்கிறார்.

"Make it a tradition. Always begin with yourself. Do what you want, drop what you don't. Befriend yourself, write letters for you, alleviate your weak spots, empower your passion. Always put your name at the top of your list. Happiness should start on how we accept the things people told us to change. Show them your strengths and disprove their touchstones. Be your own standard. Be there for you." - Mica Meñez, start again







ஒரு விவசாயி வளர்த்து வந்த வயதான பொதி சுமக்கும் கழுதை ஒன்று தவறி அவன் தோட்டத்தில் உள்ள வறண்ட கிணற்றில் விழுந்துவிடுகிறது. உள்ளே விழுந்த கழுதை அலறிக்கொண்டே இருந்தது. அதை எப்படி கிணற்றிலிருந்து வெளியேற்றி காப்பாற்றுவது என்று அவன் விடிய விடிய யோசித்தும் ஒரு யோசனையும் புலப்படவில்லை. காப்பாற்ற எடுக்கும் எந்த முயற்சியும் அந்த கழுதையின் விலையை விட அதிகம் செலவு பிடிக்ககூடியதாக இருந்தது. அந்த கிணறு எப்படியும் மூடப்பட வேண்டிய ஒன்று. தவிர அது மிகவும் வயதான கழுதை என்பதால் அதை காப்பாற்றுவது வீண்வேலை என்று முடிவு செய்த அவன், கழுதையுடன் அப்படியே அந்த கிணற்றை மூடிவிடுவது என்று முடிவு செய்தான்.

அக்கம் பக்கத்தினரை உதவிக்கு கூப்பிட அனைவரும் திரண்டனர். சற்று அருகில் இருந்த ஒரு மண் திட்டிலிருந்து மண்ணை மண்வெட்டியில் அள்ளி கொண்டு வந்து அந்த கிணற்றில் அனைவரும் போட ஆரம்பித்தனர். கழுதை நடப்பதை உணர்ந்து தற்போது மரண பயத்தில் அலறியது. ஆனால் அதன் அலறலை எவரும் சட்டை செய்யவில்லை. இவர்கள் தொடர்ந்து மண்ணை அள்ளி அள்ளி கொட்ட கொஞ்சம் நேரம் கழித்து அதன் அலறல் சத்தம் அடங்கிவிட்டது. ஒரு பத்து நிமிடம் மண்ணை அள்ளி கொட்டியவுடன் கிணற்றுக்குள்ளே விவசாயி எட்டிப் பார்க்க, அவன் பார்த்த காட்சி அவனை வியப்பிலாழ்த்தியது. ஒவ்வொரு முறையும் மண்ணை கொட்டும்போது, கழுதை தனது உடலை ஒரு முறை உதறிவிட்டு, மண்ணை கீழே தள்ளி, அந்த மண்ணின் மீதே நின்று வந்தது.இப்படியே பல அடிகள் அது மேலே வந்திருந்தது. இவர்கள் மேலும் மேலும் மண்ணை போட போட கழுதை தனது முயற்சியை கைவிடாது, உடலை உதறி உதறி மண்ணை கீழே தள்ளி தள்ளி அதன் மீது ஏறி நின்று வந்தது. கழுதையின் இடைவிடாத இந்த முயற்சியால் அனைவரும் வியக்கும் வண்ணம் ஒரு வழியாக கிணற்றின் விளிம்பிற்கே வந்துவிட்டது.விளிம்பை எட்டியவுடன் மகிழ்ச்சியில் கனைத்த கழுதை ஒரே ஓட்டமாக ஓடி தோட்டத்திற்குள் சென்று மறைந்தது.வாழ்க்கை பல சந்தர்ப்பங்களில் இப்படித் தான் நம்மை படுகுழியில் தள்ளிக் குப்பைகளையும், மண்ணையும் நம் மீது கொட்டி நம்மை சமாதி கட்ட பார்க்கும். ஆனால் நாம் தான் இந்த கழுதை போல தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டு, அவற்றை உதறித் தள்ளி மேலே வரவேண்டும்.நம்மை நோக்கி வீசப்படும் ஒவ்வொரு கல்லையும் சாமர்த்தியமாக பிடித்து படிக்கற்களாக்கிக் கொள்ளவேண்டும், எத்தனை பெரிய குழியில் நீங்கள் விழுந்தாலும். இத்தோடு நம் கதை முடிந்தது என்று கருதாமல் விடாமுயற்சி என்ற ஒன்றைக் கொண்டு நீங்கள் நிச்சயம் மேலே வரலாம்.










ஆர்க்கிமிடீஸ் தத்துவத்தை அன்றே செயல்படுத்திய தமிழ் மன்னன். கோச்சடையானுக்கு ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் என்கின்ற பெயரும் உண்டு. ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் பாண்டிய நாட்டை சேர்ந்தவர். சோழர்கள், சேரர்கள், மற்றும் ஆந்திரர்கள் இவர்களை எல்லோரையும் போரில் வென்று தமிழகத்தை விரிவாக்கி பாண்டிய நாட்டு ஆட்சிக்குள் கொண்டு வந்தார். சோழர்களை போரில் வென்றதன் விளைவாக அவர்கள் சேர்த்து வைத்திருந்த விலை மதிப்பில்லா செல்வங்கள் அனைத்தும் ஜடாவர்மனுக்குக் கிடைத்தது. ஆனால் ஜடாவர்மனோ கிடைத்த செல்வங்களை தானே எடுத்துக் கொள்ளாமல் அனைத்தையும் தென்னகத்தில் இருந்த பல கோவில்களுக்கு நன்கொடையாக தந்து விட்டார். குறிப்பாக தொண்டை நாட்டிலுள்ள கோவில்களுக்கு நிறைய திருப்பணிகள் செய்தார். இந்த திருப்பணிகளால் அதிகம் பயன்பெற்ற கோவில்கள் என்றுப் பார்த்தால் சிதம்பரத்தில்இருக்கின்ற நடராசன் பெருமான் கோவிலும் திருவரங்கத்தில் இருக்கக்கூடிய இரங்கநாதர் கோவிலும் தான். திருவரங்கத்தில் இருக்கின்ற இரங்கநாதர் கோவிலுக்கு சுந்தரப் பாண்டியன் "துலாபாரதானம்" செய்தார். துலாபார தானம் என்றால் தராசு கட்டியில் ஒருவரை அமர செய்து அவரின் எடைக்கு சமமான தங்கத்தை நன்கொடையாக கொடுப்பதாகும். ஆனால் சுந்தரப் பாண்டியன் செய்த "துலாபார தானம்" சற்று புதுமையானது. ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் தனது பட்டத்து யானையை நன்கு அலங்கரித்து அந்த யானைக்கு மேல் கனமான அம்பாரி, அந்த அம்பாரிக்கு மேல் பூரண கவசத்துடன் தன் பட்டத்தரசியுடன் தானும் அமர்ந்துக் கொண்டார். முன்புறம் யானையின் பாகன் அமர்ந்துக் கொண்டான். யானை, அம்பாரி, அரச தம்பதியர் மற்றும் யானைப் பாகன் இவர்களின் எடைக்கு சமமான தங்க ஆபரனங்களை திருவரங்கக் கோவிலுக்கு நன்கொடையாக தந்தான்.


இப்பொழுது கேள்வி என்னவென்றால் எப்படி ஜடாவர்மன் பாண்டியன் இவர்களின் எடை சரியாக அளந்து அதை சமமான தங்க ஆபரணங்களை தானமாக கொடுத்தான் ? ஒரு வேளை யானை அளவிற்கு ஒரு தாராசுக் கட்டியை செய்து அளந்திருப்பானோ ? அதுதான் இல்லை. முதலில் ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் காவிரிக் கரையாரில் ஒரு நீராழி (குளம்) மண்டபத்தை காட்டினான். அந்த மண்டபத்திருக்குப் பக்கத்தில் ஒரு தெப்பத்தை (நீரில் மெதக்கும் ஒரு பெரிய பலகைப் போன்றது) கட்டினான். அந்த தெப்பதற்கு மேல் அம்பாறிப் பூட்டப்பட்ட பட்டத்துயானையின் மீது பாண்டியனும் அரசியும் மற்றும் பாகனும் அமர்ந்தவாறு ஏறினார்கள். யானை தெப்பத்தின் மீது ஏறியவுடன் அந்த தெப்பம் சிறிதளவு தண்ணீரில் அமிழ்ந்தது. பிறகு அதிலிருந்து யானையை இறக்கி விட்டு தங்க ஆபரங்களை வைக்க ஆரம்பித்தார்கள். யானை நின்ற பொழுது எவ்வளவு தூரம் தெப்பம் அமிழ்ந்ததோ அந்த அளவு வரும் வரை தங்க ஆபரணங்களை வைத்துக்கொண்டே இருந்தார்கள். கடைசியாக யானை நின்ற பொழுது அமிழ்ந்த அளவும் வந்தது. பிறகு செல்வங்களை எடுத்து கோவிலுக்கு கொடுத்தார். ஆர்கிமிடீஸ் தத்துவத்தை (படத்தில் உள்ளது) தமிழன் என்றோ தெரிந்து வைத்திருக்கின்றான் என்று நினைக்கும் பொழுது நமக்கு வியப்பாக இருக்கும்.

**A very beautiful story --Thomas Edison And A Note:**

One day the young Thomas Edison came home and handed a paper to his mother from his school. He told her, "My teacher gave this paper to me and told me to give it only to you." His mother's eyes were tearful as she read the letter out loud to her son. "Your son is a genius. This school is too small for him and doesn't have good teachers for training him. Please teach him yourself." After years, Edison's mother died and he was renowned as one of the greatest inventors of the century. One day he was going through his old family things. Suddenly, he noticed a folded paper in the corner of a drawer. He took it and opened it up.
On the paper was written: "Your son is addled. We won't let him come to school anymore." Thomas Edison cried for hours and then he wrote in his diary: "Thomas Alva Edison was an addled child that, by a hero mother, became the genius of the century."






"A box without hinges, key, or lid, yet golden treasure inside is hid."

## Longer riddle

"When I am alive I do not speak. Anyone who wants to takes me captive and cuts off my head. They bite my bare body I do no harm to anyone unless they cut me first. Then I soon make them cry."

## Short riddle

"A wonder on the wave / water became bone."

What goes up when the rain comes down?

Where is the only place that yesterday always comes after today?

கையில்லாமல் நீந்துவான்;
கால் இல்லாமல் ஓடுவான்.
அவன் யார்?

அழகான பெண்ணுக்கு
அதிசயமான வியாதி,
பாதிநாள் குறைவாள்,
பாதிநாள் வளர்வாள்
அது என்ன?


வீட்டுக்கு வந்த
விருந்தாளியை வரவேற்க
ஆளில்லை. அது

நீரிலும் வாழ்வேன், நிலத்திலும்
வாழ்வேன். நீண்ட ஆயுள்
உடைய எனக்கு இறைவன்
கொடுத்த கவசமும் இருக்கு.
நான் யார் ?

அடிக்காமல்,திட்டாமல்
கண்ணீரை
வரவழைப்பாள்
அவள் யார்?

ஆழக் குழி தோண்டி அதிலே
ஒரு முட்டையிட்டு
அண்ணாந்து பார்த்தால்
தொண்ணூறு முட்டை
அது என்ன ?

எவர் கையிலும்
சிக்காத கல்
எங்கும் விற்காத கல்,
அது என்ன?




மேலிலும் துவாரம், கீழிலும்
துவாரம், வலதிலும் துவாரம்,
இடதிலும் துவாரம்,
உள்ளிலும் துவாரம்
வெளியிலும் துவாரம்
இருந்தும் நீரை என்னுள்
சேமித்து வைப்பேன், நான் யார்?